CASE NO. CC 224/2022

Date 22.07.2025

பெயர் PW 1 – அருணகிரி, த.பெ.நாகு

<u>(எதிரி ஆஜர்).</u>

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

1) நான் ஊரகவளர்ச்சி துறையில் A.E ஆக பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான். நான் சிவகங்கையில் எத்தனை வருடமாக பணிபுரிந்து வருகிறேன் என்றால் 18 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். நான் தற்போது A.E ஆக பணிபுரிந்து எவ்வளவு மாதம் சம்பளம் வாங்கிவருகிறேன் என்றால் ரூ.98,000/-க்கு மேல் வாங்கி வருகிறேன். ஆஜர் எதிரியை எப்படி எனக்கு தெரியும் என்றால் கம்யூட்டர் ஆப்ரேட்டராக பணிபுரிந்தவர் ராகவன் என்பவர் மூலம் தெரிந்து கொண்டேன். ஆஜர் எதிரியை எப்போது அறிமுகம் செய்து வைத்தார் என்றால் 2020ம் வருடத்தில் அறிமுகம் செய்தார். ராகவனும் நானும் தற்போது வரை நல்ல பழக்க வழக்கத்தில் இருந்து வருகிறோம் என்றால் சரிதான். ஆஜர் எதிரிக்கு எங்கு வைத்து பணம் கொடுத்தார் என்றால் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள முகவரியில் உள்ள வீட்டில் வைத்து பணம் கொடுத்தார். எதிரி என்னிடம் பணம் கேட்கும் போது ரூ.2,50,000/- வைத்திருந்தேனா என்றால் லோன் போட்டு வீடு கட்டுவதற்காக பணம் வைத்திருந்தேன். எதிரிக்கு நான் வழக்கில் சொன்ன தேதியில் பணம் கொடுப்பதற்கு முன்பு கொடுக்கல் வாங்கல் செய்து வந்தேனா என்றால் கொடுக்கல் வாங்கல் செய்து வந்தேன். முன்பு எவ்வளவு பணம் கொடுத்தேன் என்றால் எனக்கு நியாபகமில்லை. நான் கொடுத்த பணத்தை எதிரி திரும்ப முறையாக செலுத்தி வந்தார் என்றால் சரிதான். எதிரி காசோலையை எங்கு வைத்து கொடுத்தார் என்றால் பையூரில் ஒரு வீட்டின் முன்பு வைத்து கொடுத்தார். காசோலை கொடுக்கும்போது யார் உடன் இருந்தார்கள் என்றால் வீரராகவன் உடன் இருந்தார். எதிரியிடம் யார் மூலமாக யார் மூலமாக பணம் கேட்டேன் என்றால் நான் மட்டும் தான் கேட்டேன். எதிரியிடம் பணத்தை நான் கடனாக கொடுக்கவில்லை அவர் நடத்தி வந்த ஜெகே டிரேடர்ஸ் நிறுவனத்தில் முதலீடு செய்தேன் என்றால் சரியல்ல. எதிரி பணத்தை திரும்ப கொடுத்தாரா என்றால் இல்லை. என் மீது ஊழல் வழக்கு பதிவு செய்யப்பட்டது

என்றும், அந்த செலவிற்காக எதிரி பணம் கொடுத்தார் என்றால் சரிதான். எதிரி நான் கொடுத்த பணத்தை திருப்பி கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. 02.11.2021-ம் தேதி எதிரியிடமிருந்து பையூர் அலுவலகத்தில் வைத்து ரூ.3,00,000/- பணம் வாங்கினேனா என்றால் இல்லை. நான் அரசு ஊழியர் என்பதால் வட்டிக்கு பணம் கொடுக்ககூடாது என்றால் சரிதான் நான் வட்டிக்கு பணம் கொடுக்கவில்லை. நான் வீரராகவன், கவிதா, செல்வி ஆகியோர்கள் சேர்ந்து எதிரிக்கு எதிராக பொய்யாக வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.

SELVAM P

Digitally signed by SELVAM P
Date: 2025.07.25 15:50:53 +0530